நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

தரம் : இடைநிலை - மேற்பிரிவு
Level : Intermediate - Upper

2014

June 2014

வினாக்கள் : 55
வழங்கப்படும் நேரம் : 65 நிமிடங்கள்
(வாசிப்பதற்கான நேரம் 10 நிமிடங்கள் உட்பட)

**உங்கள் பதில்களை தரப்பட்ட விடைத்தாளில் குறியிடுக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

**பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

அச்சுப் பொறியின் வளர்ச்சி பொதுவாக உலகம் முழுவதும் ஒரு புரட்சியை உண்டாக்கியது. மேல் நாடுகளில் அதற்கு முன் செல்வந்தர்களின் தனியுடைமையாகத் திகழ்ந்த கல்வியும் நூல்களும் பொது உடைமையாக மாறின. எல்லோரும் எளிதில் கற்கவும், விரும்பிய நூல்களை எளிதில் வாங்கவும் முடிந்தது. அத்துடன் மக்கள் தம் சொந்த மொழியில் நூல்களை எழுதினர். சொந்த மொழி நூல்களைப் பாமரரும் படித்துப் பயன் பெற்றனர்.

ஐரோப்பிய நாடுகளில், அச்சுக்கலையின் வளர்ச்சிக்கு முன்பு பொதுத் தொடர்பு மொழியான இலத்தீன் மொழியில் மிகுதியான நூல்கள் வெளிவந்தன. அச்சுக் கலையின் வளர்ச்சிக்குப் பிறகு ஒவ்வொரு நாட்டிலும் தாய்மொழியில் எழுதப்பட்ட நூல்கள் அதிகமாகி, இலத்தீன்மொழி நூல்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. இதைப் போலவே தமிழ்நாட்டிலும் சமஸ்கிருத மொழிக்கு அளிக்கப்பட்டு வந்த மதிப்பு அச்சுக்கலையின் வளர்ச்சியால் குறைந்தது. தமிழ்மொழியின் நிலை உயர்ந்தது.

கற்க விரும்பும் ஒருவன், அச்சு நூல்கள் வருவதற்கு முன்பு ஓலைச் சுவடியையே நாடவேண்டும். ஓலைகள் முறியாதபடி, கிழியாதபடி எச்சரிக்கையோடு சுவடியைப் படிக்கவேண்டும். அச்சு நூலைப் படிப்பதில், பயன்படுத்துவதில் இத்தகைய சிரமம் இல்லை. மேலும் எத்தனை பிரதிகள் வேண்டுமானாலும் அச்சிடலாம் என்பதால் நூல்களைப் பலரும் பெற்றுப் பயனடைய முடிந்தது.

தமிழ் இலக்கியத்தில் ஐரோப்பியரின் வருகை வரை கவிதையே தனியரசு செலுத்தியது. பின்னரே கவிதையின் செல்வாக்குக் குறைந்து, ஒரு கருத்தை வெளியிட மிக எளிதான, ஏற்றதான உரைநடை வளர்ந்து செழித்தது. பதினாறாம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட "கிறித்துவ வேதோபதேசம்" என்னும் முதல் தமிழ் அச்சு நூல் ஒரு உரைநடை நூலாகும். பதினேழாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டிற்கு வந்த இத்தாலியரான ரொபேட் நொபிலி என்னும் தத்துவபோதக சுவாமிகள், "மந்திரவியாக்கியானம்" உட்படப் பத்துக்கு மேற்பட்ட உரைநடை நூல்களை எழுதி வெளியிட்டார். பதினெட்டாம் நூற்றாண்டில் பெஸ்கி என்னும் வீரமாமுனிவர் தமிழ் உரைநடையைத் தம் சீரிய தொண்டால் வளப்படுத்தினார். இவ்வாறு உரைநடை நூல்கள் எளிதாகவும் எல்லோருக்கும் விளங்கும் முறையிலும் இருப்பதைத் தமிழர் கண்டனர். அதன் பிறகு, தமிழ்ப்புலவர்களும் தமிழ்மக்களும் உரைநடையைப் பயன்படுத்தினர். இவ்வாறு உரைநடையை அனைவரும் பயன்படுத்தத் தொடங்கியதும் தமிழ் மறுமலர்ச்சி பெற்றது.

(டாக்டர் பூவண்ணன் எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு என்ற நூலில் இருந்து இப்பகுதி எடுக்கப்பட்டது)

**சரியான விடையைத் தெரிந்தெடுக்கவும்.**

1. மேல்நாடுகளில் முன்னர் எவை எவை தனியுடைமையாகத் திகழ்ந்தன?
   - a. கல்வியும் செல்வமும்
   - b. வீரமும் புலமையும்
   - c. கல்வியும் நூல்களும்
   - d. இவையனைத்தும்

2. ஏன் பின்னர் அவை பொதுவுடமையாகின?

a. ஓர் அதிசயம் நிகழ்ந்ததால்
b. அச்சுப் பொறி கண்டுபிடிக்கப்பட்டதால்
c. எல்லோரும் நூல்கள் எழுதத் தொடங்கியதால்
d. எல்லோரும் நூல்களைப் படிக்க விரும்பியதால்

3. ஐரோப்பாவில் அச்சுப் பொறி கண்டுபிடிக்கப்படுவதன் முன்னர் எந்த மொழியில் அதிக நூல்கள் காணப்பட்டன?

a. ஆங்கிலம்
b. இலத்தீன்
c. ஜேர்மானியம்
d. பிரஞ்சு

4. அச்சுப்பொறி வரமுன்னர் தமிழர் எந்த மொழியில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர்?

a. கன்னடம்
b. தெலுங்கு
c. மலையாளம்
d. சமஸ்கிருதம்

5. அச்சுப் பொறி வந்ததால் எந்த மொழி முதன்மை பெற்றது?

a. தாய் மொழி
b. வேற்று மொழி
c. பிரஞ்சு மொழி
d. ஆங்கில மொழி

6. தமிழ்நாட்டில் கற்க விரும்புபவர் அச்சுப் பொறி வருவதன் முன்னர் எதில் எழுதப்பட்ட நூல்களைப் படித்தனர்?

a. பாறைகளில்
b. ஓலைச் சுவடிகளில்
c. காகிதத்தில்
d. இவை அனைத்திலும்

7. ஐரோப்பியர் வருகையுடன் எதன் செல்வாக்குக் குறைவடைந்தது?

a. உரைநடையின்
b. புதுக்கவிதையின்
c. கவிதையின்
d. இவை அனைத்தினதும்

8. எப்போது முதலாவது தமிழ் நூல் அச்சேறியது?

a. 13 ஆம் நூற்றாண்டில்
b. 15 ஆம் நூற்றாண்டில்
c. 14 ஆம் நூற்றாண்டில்
d. 16 ஆம் நூற்றாண்டில்

9. ரொபேட் நொபிலி எந்த நாட்டவர்?

a. அமெரிக்கர்
b. பிரான்சியர்
c. ஜேர்மனியர்
d. இத்தாலியர்

10. பெஸ்கியின் தமிழ்ப் பெயர்

a. தத்துவபோதக சுவாமிகள்
b. பரமார்த்த குரு
c. வீரமாமுனிவர்
d. குருபர சுவாமிகள்

**பின்வரும் பாரதியார் பாடலினை வாசித்து அதிலுள்ள தகவல்களைக் கொண்டு 11 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

பாப்பா பாட்டு

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா

பொய்சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா
தெய்வம் நமக்குத்துணை பாப்பா - ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா

பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா

துன்பம் நெருங்கிவந்த போதும் - நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா
அன்புமிகுந்த தெய்வ முண்டு - துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா

சோம்பல் மிகக்கெடுதி பாப்பா - தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா
தேம்பி யழுங்குழந்தை நொண்டி - நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.

(பாரதியார்)

11. புறம் சொல்லுதல் என்பது

a. தன்னைப் புகழ்தல்
b. மற்றவரை இகழ்தல்
c. மற்றவரைப் புகழ்தல்
d. தன்னை இகழ்தல்

12. பாதகம் என்பது

a. நன்மை
b. கொடுமை
c. இனிமை
d. கெடுதல்

13. பாதகம் செய்பவரைக் கண்டால் என்ன செய்ய வேண்டும் என்று பாரதியார் கூறுகிறார்?

a. பயம் கொள்ள வேண்டும்
b. அந்த இடத்தைவிட்டு ஓடிவிட வேண்டும்
c. மோதி மிதித்துவிட வேண்டும்
d. சிரித்து மகிழ வேண்டும்

14. எது மிகக் கெடுதி தருவது?

a. சோம்பல்
b. கவலை
c. மகிழ்ச்சி
d. துன்பம்

15. அழும் குழந்தைக்குப் பாரதியார் கூறும் அறிவுரை என்ன?

a. தொடர்ந்து அழுது கொண்டே இரு
b. திடம் கொண்டு போராடு
c. சிரித்து மகிழ்
d. எப்போதும் கவலையோடு இரு

**வினாக்கள் : 16 முதல் 20**
**பின்வரும் வாக்கியங்களில் தவறாக எழுதப்பட்ட சொல்லின் சரியான சொல்லைத் தெரிவு செய்க**

16. அவர்கள் அனைவரும் இணைந்து மலையில் ஏரிணார்கள்.

a. ஏறிணார்கள்
b. ஏறினார்கள்
c. ஏறுனார்கள்
d. ஏரினார்கல்

17. என்னும் எழுத்தும் கண் எனத் தகும்.

a. என்னும்

b. எண்ணும்

c. என்ணும்

d. எண்னும்

18. அவர்கள் மகிழ்ச்சியாக வால்கிறார்கள்.

a. வாழ்கிறார்கள்

b. வாள்கிறார்கள்

c. வால்கிறார்கல்

d. வாழ்கிறார்கல்

19. ஐரோப்பிய அறிஞர் தென்நாட்டுக்கு வருகை தந்தனர்.

a. தெண்ணாட்டுக்கு

b. தெந்நாடுக்கு

c. தென்னாட்டுக்கு

d. தென்ணாட்டுக்கு

20. வழரும் பயிரை முளையில் தெரியும்.

a. வளரும்

b. வலரும்

c. வலறும்

d. வளறும்

**வினாக்கள் : 21-24**

**பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க**

a. திரிந்தது b. வட்டமிட்டது c. வந்தாள் d. வசிக்கிறார்கள்

21. பருந்து வானத்தில் ____________

22. அவள் பள்ளியில் இருந்து பசியோடு ____________

23. அருணனும் மாலனும் அழகான வீட்டில் ____________

24. காகம் தாகத்தால் எங்கும் பறந்து ____________

**வினாக்கள் : 25 - 29**
**பொருத்தமான வினைமுற்றைத் தெரிவு செய்து வசனத்தை முழுமைப்படுத்துக .**

25. மாலனும் மாலதியும் பள்ளிக்குப் ____

a. போனான் b. போனாள் c. போனார்கள் d. போனது

26 பூக்கள் அழகாகப்

a. பூத்தது b. பூத்தான் c. பூத்தன d. பூத்தாள்

27. நான் பெரிய பாடகனாக

a. வந்தோம் b. வருவேன் c. வருவான் d. வருகிறாள்

28. அவளும் அவனும் பாடம்

a. படிக்கிறேன் b. படிக்கிறோம் c. படிக்கிறார்கள் d. படிக்கிறாள்

29. சேவல் காலையில்

a. கூவினான் b. கூவினாள் c. கூவியது d. கூவின

**வினாக்கள் : 30 - 33**
**பொருத்தமான அடைமொழியைத் (Adjective) தெரிவு செய்க**

a. மிக அழகிய b. பெரிய கல்வீட்டில் c. இளஞ்சிவப்பு d. சின்னஞ்சிறிய

30. மகிழ்னன் ________ நிறப் பூக்களைக் கொண்டு வந்தான்.
31. அவனுடைய ________ தம்பி விளையாடுகிறான்.
32. கமலாவிடம் ________ பொம்மை இருக்கிறது.
33. அதோ அந்தப் ________ வசந்தன் வசிக்கிறான்.

**வினாக்கள் : 34 - 38**
**பின்வரும் பழமொழிகளுக்குப் பொருத்தமான வசனங்களைத் தெரிவு செய்க**

34. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து

a. இளமையில் படிப்பது சிலை செய்வது போன்றது
b. சிலையில் இளமையில் எழுதவேண்டும்
c. கல்விக்கும் எழுத்துக்கும் உள்ள தொடர்பைக் கூறுகிறது
d. இளமையில் அறிவது கல்லில் எழுதியதுபோல நிரந்தமாக மனதில் படியும்

35. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்

a. ஊரில் கூத்தாடி வந்து கூத்தாடுவான்
b. ஊர் இரண்டுபட்டால் எல்லோருக்கும் நல்ல கொண்டாட்டம்
c. பிரிவினைக்கு இடம் கொடுக்கக்கூடாது
d. இவை அனைத்தும் பொருத்தமாக இல்லை

36. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

a. எல்லோரும் ஒரே வீட்டில் வாழவேண்டும்
b. எல்லோரும் ஒரே தொழிலைச் செய்யவேண்டும்
c. அனைவரும் ஒன்றுபட்டு இயங்கினால் எல்லோர் வாழ்வும் சிறக்கும்
d. இவை அனைத்துமே பொருத்தமானவை

37. விளையும் பயிரை முளையில் தெரியும்.

a. பயிரின் முளை அழகாக இருக்கும்
b. தொடக்கம் சிறப்பாக இருப்பது போலவே முடிவும் நன்றாக அமையும்
c. பயிர் விளைவது பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்
d. இவை அனைத்துமே தவறு

38. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்

a. கை இருந்தால்தான் சித்திரம் வரையலாம்
b. நாக்கு இருந்தால்தான் தமிழ்ப் பேசலாம்
c. பயிற்சியால் எதையும் சாதிக்க இயலும்
d. சித்திரத்திற்கும் செந்தமிழுக்கும் உள்ள பொருத்தத்தைக் கூறுகிறது

**வினாக்கள் : 39-41**
**பின்வரும் உவமைத் தொடர்களைப் பொருத்தமான இடங்களில் தெரிவு செய்க**

a. அத்தி பூத்தாற் போல
b. இலவு காத்த கிளி போல
c. தாயைக் கண்ட சேயைப் போல
d. உடுக்கை இழந்தவன் கை போல

39. நண்பன் எனது துன்பத்தை அறிந்ததும் ஓடோடி வந்து உதவி செய்தான்.

40. அவள் வெற்றி கிடைக்கும் என்று தொடர்ந்து காத்திருந்து பின் கிடைக்காததால் ஏமாற்றமடைந்தாள்.

41. நீண்ட காலத்திற்கு ஒரு முறைதான் அவர் எங்கள் வீட்டுக்கு வருவார்.

**வினாக்கள் : 42-44**
**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

a. பாரதியார் b. கம்பன் c. ஔவையார் d. பாரதிதாசன்

42. தமிழில் இராமாயணம் எழுதியவர் யார்?

43. மனதில் உறுதி வேண்டும் என்று ஆரம்பமாகும் பாடலைப் பாடியவர் யார்?

44. அறம் செய்ய விரும்பு, ஆறுவது சினம் - எழுதியவர் யார்?

**வினாக்கள் : 45-46**
**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

a. பல்லவர் காலம் b. சங்க காலம் c. காவியங்கள் d. பிரபந்தங்கள்

45. சீவக சிந்தாமணியும் மணிமேகலையும் எந்த இலக்கிய வகையைச் சேர்ந்தவை?

46. அகம் புறம் என்ற விடயங்கள் முக்கியம் பெற்ற காலம் எது?

**வினாக்கள் : 47-49**
**பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

47. வான் நிலா நிலா அல்ல வாலிபம் நிலா
தேன் நிலா எனும் நிலா...

என்ற பாடலில் இளமை என்ற பொருளில் அமைந்த சொல்

a. வான் b. நிலா c. வாலிபம் d. தேன்

48. தூய தமிழ்ச் சொல்

a. மகோற்சவம் b. நமஸ்காரம்

c. ஸ்தாபனம் d. குடமுழுக்கு

49. அழகிய மானை கொடிய புலி கடித்துக் கொன்றது
என்ற வாக்கியத்தில் உள்ள அழகிய கொடிய கடித்து ஆகிய சொற்கள் எவ்வாறு அழைக்கப்படும்?

a. இணை மொழிகள் b. அலங்கார மொழிகள்

c. அடை மொழிகள் d. முது மொழிகள்

**சொற்திறன் வினாக்கள் : 50 -55**

**பின்வரும் உரைப் பகுதியில் கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொற்களை விடைத்தாளில் குறித்த எண்ணுக்கு எதிரே எழுதுக**

காந்தியடிகள் உலகம் போற்றும் பெரியார்களுள் ஒருவர். அவர் இந்தியாவில் தோன்றினார். மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்பது அவரது முழுப் (50) ____________ ஆகும். அவர் இந்தியா விடுதலை பெற அரும் பாடுபட்டார். காந்தி தம் உயர்கல்வியை இந்தியாவில் படித்து முடித்தார். பின்னர், அவர் சட்டக்கல்வி பயில (51) ____________ சென்றார். காந்திக்கு வேண்டிய பணத்தை அவருடைய தமையனார் அனுப்பி வந்தார். அங்கே தொடக்கத்தில் காந்தி (52) ____________ வாழ்க்கை வாழ விரும்பினார். தங்கக் கடிகாரம், தங்கச் சங்கிலி, விலை உயர்ந்த உடைகள் ஆகியவற்றை அவர் வாங்கி அணிந்து கொண்டார். ஆங்கிலேயர் போல் நடனமாடுவதிலும் வயலின் இசையைக் கற்றுக்கொள்வதிலும் தம் ஓய்வு நேரத்தைக் கழித்தார். காந்தி தான் செலவு செய்யும் ஒவ்வொரு காசுக்கும் (53) ____________ எழுதி வைப்பது வழக்கம். ஒருநாள் அவர் தாம் எழுதி வைத்திருந்த புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தார். அப்போதுதான் அவர் தான் செய்த ஆடம்பரச் செலவுகளை உணர்ந்தார். அதை எண்ணி மனம் (54) ____________. அன்று முதல் வீண்செலவு செய்வதில்லை என்று அவர் உறுதிபூண்டார். அதன்படி, காந்தியடிகள் தம் வாழ்நாள் முழுவதும் (55) ____________ கடைப்பிடித்து வந்தார்.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

# 2014